# நம்மாழ்வார் அருளிச் செய்த
# திருவாய்மொழி
# முதல் பத்து

## மூன்றாம் திருவாய்மொழி - பத்துடை
## எம்பெருமானது ஸௌலப்யத்தை அருளிச் செய்தல்

** பத்துடை அடியவர்க்கு எளியவன் * பிறர்களுக்கு அரிய
வித்தகன் * மலர்மகள் விரும்பும் * நம் அரும் பெறல் அடிகள் **
மத்துறு கடை வெண்ணெய் களவினில் * உரவிடை ஆப்புண்டு *
எத்திறம்! உரலினோடு * இணைந்து இருந்து ஏங்கிய எளிவே 1

எளிவரும் இயல்வினன் * நிலை வரம்பில பல பிறப்பாய் *
ஒளி வரு முழு நலம் * முதலில கேடில வீடாம் **
தெளி தரும் நிலைமை அது ஒழிவிலன் * முழுவதும் இறையோன் *
அளி வரும் அருளினோடு * அகத்தனன் புறத்தனன் அமைந்தே 2

அமைவுடை அற நெறி * முழுவதும் உயர்வற உயர்ந்து *
அமைவுடை முதல் கெடல் * ஒடிவிடை அற நிலம் அதுவாம் **
அமைவுடை அமரரும் * யாவையும் யாவரும் தானாம் *
அமைவுடை நாரணன் மாயையை * அறிபவர் யாரே? 3

யாரும் ஓர் நிலைமையன் என * அறிவரிய எம்பெருமான் *
யாரும் ஓர் நிலைமையன் என * அறிவெளிய எம்பெருமான் **
பேரும் ஓர் ஆயிரம் * பிற பல உடைய எம்பெருமான் *
பேரும் ஓர் உருவமும் * உளதில்லை இலதில்லை பிணக்கே 4

பிணக்கற அறு வகைச் சமயமும் * நெறி உள்ளி உரைத்த *
கணக்கறு நலத்தனன் * அந்தமில் ஆதி அம்பகவன் **
வணக்குடைத் தவ நெறி * வழி நின்று புற நெறி களை கட்டு *
உணக்குமின் பசை அற * அவனுடை உணர்வு கொண்டு உணர்ந்தே 5

உணர்ந்து உணர்ந்து இழிந்து அகன்று * உயர்ந்துரு வியந்த இந்நிலைமை *
உணர்ந்து உணர்ந்து உணரிலும் * இறை நிலை உணர்வரிது உயிர்காள்! **
உணர்ந்து உணர்ந்து உரைத்து உரைத்து * அரி அயன் அரன் என்னும் இவரை *
உணர்ந்து உணர்ந்து உரைத்து உரைத்து * இறைஞ்சுமின் மனப்பட்டதொன்றே 6

ஒன்றெனப் பல என * அறிவரும் வடிவினுள் நின்ற *
நன்றெழில் நாரணன் * நான்முகன் அரன் என்னும் இவரை **
ஒன்ற நும் மனத்து வைத்து * உள்ளி நும் இரு பசை அறுத்து *
நன்றென நலம் செய்வது * அவனிடை நம்முடை நாளே 7

நாளு நின்றடு நம பழமை * அங்கொடு வினை உடனே
மாளும் * ஓர் குறைவில்லை * மனன் அக மலம் அறக் கழுவி **
நாளு நம் திருவுடை அடிகள் தம் * நலங்கழல் வணங்கி *
மாளும் ஓர் இடத்திலும் * வணக்கொடு மாள்வது வலமே 8

வலத்தனன் திரிபுரம் எரித்தவன் * இடம் பெறத்துந்தித்
தலத்து * எழு திசை முகன் படைத்த * நல் உலகமும் தானும்
புலப்பட ** பின்னும் தன் உலகத்தில் * அகத்தனன் தானே
சொலப் புகில் * இவை பின்னும் வயிற்றுள * இவை அவன் துயக்கே 9

துயக்கறு மதியில் நல் ஞானத்துள் * அமரரைத் துயக்கும் *
மயக்குடை மாயைகள் * வானிலும் பெரியன வல்லன் **
புயற்கரு நிறத்தனன் * பெரு நிலம் கடந்த நல் அடிப் போது *
அயர்ப்பிலன் அலற்றுவன் * தழுவுவன் வணங்குவன் அமர்ந்தே 10

** அமரர்கள் தொழுதெழ * அலைகடல் கடைந்தவன் தன்னை *
அமர் பொழில் வளங்குருகூர்ச் * சடகோபன் குற்றேவல்கள் **
அமர் சுவை ஆயிரத்து * அவற்றினுள் இவை பத்தும் வல்லார் *
அமரரோடு உயர்வில் சென்று * அறுவர் தம் பிறவி அஞ்சிறையே 11

**ஆழ்வார் திருவடிகளே சரணம்**